# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

முன்னிலை: திரு ஜெ.ஆன்ஸ் ராஜா பி.ஏ, பி.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்

2025 ஆம் வருடம் நவம்பர் மாதம் 28-ஆம் நாள், வெள்ளிக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஸ்ரீவிசுவாவசு வருடம் கார்த்திகை மாதம் 12-ம் நாள் வெள்ளிக்கிழமை

**இ.ம.எண்.03/2025 இன் அ.வ.எண்.40/2023**

பன்னீர்செல்வம் ... மனுதாரர் / வாதி

/எதிர்/

1) மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம்
திருநெல்வேலி.
2) வள்ளியூர் வட்டார வளர்ச்சி
அலுவலர் மூலம்
3) அச்சம்பாடு ஊராட்சி
தலைவர் மூலம்
4) உதவி இயக்குநர் (கிராம ஊராட்சி)
திருநெல்வேலி ... எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

இம்மனுவானது 06.11.2025 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.பாண்டியராஜா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசாங்க வாதுரைஞர் திரு. V.முத்துகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாத உரையை கேட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.12.02 12:29:01 +0530

## உத்தரவு

மனுதாரரால் இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17 ன்கீழ் மனுவில் கண்ட சீர்திருத்த விவரப்படி வழக்குரையில் சீர்திருத்தம் செய்ய அனுமதிக்க கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) <u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:</u>:-

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் கண்ட 1ம் தபசிலின் வடபகுதியில் உள்ள செண்டு 2ல்தான் எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமித்து மேல்நிலை நீர் தேக்க தொட்டி அமைத்துள்ளார்கள். அவ்வாறு எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமித்த பகுதியை வழக்கில் 2 ம் தபசிலாக காண்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் 11.01.2024 அன்று வழக்கறிஞரை சந்தித்து அசல் வழக்கின் பிராதினை படித்து பார்த்தபோதுதான் எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமித்த பகுதியானது 1ம் தபசில் சொத்தினுள் வடக்கடைய செண்டு 2 என்பதற்கு பதிலாக தவறுதலாக தெற்கடைய செண்டு 2 என்று தபசில் விவரத்தில் காண்பிக்கப்பட்டுள்ள விபரம் தெரியவந்தது. எனவே, அசல் வழக்கின் பிராதின் 2 ம் தபசில் விபரத்தில் செண்டு 10 ல் தெற்கடைய செண்டு 2 என்று உள்ளதை நீக்கம் செய்துவிட்டு அதற்கு பதிலாக செண்டு 10 ல் வடக்கடைய செண்டு 2 என்று மாற்றம் செய்ய வேண்டி அசல் வழக்கினை சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.12.02 12:29:08 +0530

2) எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கவுண்டர் மெமோவின் சுருக்கம்:-

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மனு சீர்திருத்த விவரத்தில் கூறியுள்ளபடி வழக்கை சீர்திருத்தம் செய்தால், வழக்கு சொத்தின் தன்மை முற்றிலும் மாறுபட்டுவிடும். மனு சீர்திருத்த விபரம் 4ம் பத்தியில் அமலதாசன் நிலம் என்பதை நீக்கிவிட்டு, முன்பு அமலதாசன் நிலமாக இருந்து தற்பொழுது பொதுப்பாதை என சேர்க்கவும் என கூறியுள்ளார். முன்பு அமலதாசன் நிலமாக இருந்து தற்பொழுது எவ்வாறு பொதுப்பாதையாக மாற்றம் செய்யப்பட்டது என்பதற்கு மனுவில் எந்த விளக்கமும் கூறப்படவில்லை. பொதுப்பாதை என்பதை காட்ட ஆவணங்கள் எதையும் மனுதாரர் மனுவோடு தாக்கல் செய்யவில்லை. அசல் வழக்கில் குறுந்தலைப்பு ஏற்கனவே சீர்திருத்தம் செய்ய வேண்டி உள்ளது. அதைவிடுத்து தேவையற்ற சீர்திருத்தங்களை செய்ய இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரரால் இம்மனுவானது வழக்கை இழுத்தடிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?**

3) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனு மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில், அசல் வழக்கில் கண்ட 1ம் தபசிலின் வடபகுதியில் உள்ள செண்டு 2ல்தான் எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமித்து மேல்நிலை நீர் தேக்க தொட்டி அமைத்துள்ளார்கள். அவ்வாறு எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமித்த பகுதியை வழக்கில் 2ம்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.12.02 12:29:15 +0530

தபசிலாக காண்பிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமித்த பகுதியானது 1ம் தபசில் சொத்தினுள் வடக்கடைய செண்டு 2 என்பதற்கு பதிலாக தவறுதலாக தெற்கடைய செண்டு 2 என்று தபசில் விவரத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. எனவே, அசல் வழக்கின் பிராதின் 2 ம் தபசில் விபரத்தில் செண்டு 10 ல் தெற்கடைய செண்டு 2 என்று உள்ளதை நீக்கம் செய்துவிட்டு அதற்கு பதிலாக செண்டு 10 ல் வடக்கடைய செண்டு 2 என்று மாற்றம் செய்ய வேண்டி அசல் வழக்கினை சீர்திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி உத்தேச திருத்தத்தால் வழக்கின் தன்மை மாறக்கூடியதல்ல என மிகவும் அவசியமானது என கூறியுள்ளார்.

4. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த வழக்கில் தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சினை முற்றிலுமாக தீர்மானிக்க இம்மனுவில் கூறப்படும் திருத்தம் அவசியமானது. மனுதாரரால் கூறப்படும் திருத்தத்தால் இவ்வழக்கின் தன்மை எவ்விதத்திலும் மாறபோவதில்லை. மேலும், தரப்பினர்களுக்கிடையே பல்வேறு வழக்குகள் இது தொடர்பாக எழாமல் தடுக்கவும் மற்றும் நீதியின் நலனை கருத்தில் கொண்டும் இம்மனுவானது அனுமதிக்கப்படதக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.12.02 12:29:22 +0530

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2025.12.02 12:29:28 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>-இல்லை

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2025.12.02 12:29:31 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

**மு.மா.உ.நீதிமன்றம்,வள்ளியூர்,**

**வரைவு, சீரான உத்தரவு**

**இ.ம.எண்.**03/2025 **இன்**

**அ.வ.எண்.**40/2023

**தேதி.**28.11.2025